குரு : கைவிடப்பட்டோரின் புனிதரான யூதாததேயுவே

எல் : உம்மை நாடிடும் எங்களுக்காக இறைமகன் இயேசுவை மன்றாடும்.

குரு : முடியாதவற்றைமுடிப்பவரான யூதா ததேயுவே

எல் : உம்மை நாடிடும் எங்களுக்காக இறைமகன் இயேசுவை மன்றாடும்.

குரு : நம்பிக்கை இழந்தோரின் நம்பிக்கையான யூதா ததேயுவே

எல் : உம்மை நாடிடும் எங்களுக்காக இறைமகன் இயேசுவை மன்றாடும்.

## புனிதருக்குப் புகழுரை

குரு : அன்பு சகோதரரே
இறைவன் தமது புனிதர்களிடத்தில்
வியப்புக்குரிய விதமாய் விளங்குகின்றார்
(சங். 67: 32)

புனிதர்களோ இறைவனை பின்பற்றுகிறவர்களாயிருந்தார்கள். ஆகவே நாமும் வல்லமை வாய்ந்த புனித யூதாததேயுவை மன்றாடி வாழ்வில் வளம் பெறுவோமாக! இறை அன்பால் ஈர்க்கப்பெறுவோமாக.

குரு : பன்னிரு சீடர்களின் ஒருவரான புனித யூதாததேயுவே.

எல் : உம்மை நாங்கள் வாழ்த்துகிறோம்.

குரு : இயேசுவின் நெருங்கிய உறவினரான புனித யூதா ததேயுவே

எல் : உம்மை நாங்கள் வணங்குகிறோம்.

குரு : அண்டினோரை ஆதரிக்கும் தயாள உள்ளங்கொண்ட புனித யூதா ததேயுவே

எல் : உமக்கு நன்றி கூறுகின்றோம்.

## புனித யூதா ததேயுவை நோக்கி சிறப்பு நவநாள் செபம்

குரு : புனித யூதா ததேயுவின் / வல்லமையுள்ள மன்றாட்டில் நம்பிக்கை வைத்து / அவர் புகழைப் பாடுவோமாக; அவைகளை அவருக்கு அளித்த இறைவனுக்கு / நன்றி கூறுவோமாக ! நமது தேவைகளையும் / தப்பாமல் அடைந்து தரக் கெஞ்சி மன்றாடுவோமாக.

எல் : மாட்சிமை மிக்க அப்போஸ்தலரும் வேத சாட்சியுமான / புனித யூதா ததேயுவே எங்கள் ஆண்டவரும் மீட்பருமான / இயேசுக் கிறிஸ்துவின் / நெருங்கிய உறவினரே / புண்ணியங்கள் மின்னித் துலங்கும் தூயவரே / புதுமை வரங்களில் சிறந்தவரே/ தம்மைத் தேடிவந்தவர்களை தப்பாமல் ஆதரிக்கும் / தயாள உள்ளம் கொண்டவரே / உம்மை நாங்கள் வாழ்த்துகிறோம் / வணங்குகிறோம் /
இந்த அற்புத வரங்களை உமக்களித்த / அன்புத் தேவனுக்கு ஆராதனை செலுத்துகிறோம் / இதய பூர்வமான / நன்றி நவில்கிறோம். எங்களுக்குத் தேவையான / ஆத்ம சரீர நலன்களையெல்லாம் / அடைந்து தந்தருள உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம் / சிறப்பாக / இப்போது எங்களுக்கு மிகவும் அவசியமான / இந்த வரங்களை பெற்றுத்தாரும்.

(இங்கே சிறிது நேரம் மௌனமாக உங்கள் முக்கியதேவைகளை எடுத்துக் கூறுங்கள்.)

நேசிக்கப்படத்தக்கவரும் / உள்ளப்பண்பாடு உடையவரும் இறைபுகழைப் பாடுபவரான / பெயர் பெற்று இலங்கும் / தயாள இருதய ததேயுவே / உமது வல்லமையில் / எங்கள் நம்பிக்கை / வீண்போக விடாதேயும். கர்த்தர் துரோகியின் / பெயர் ஒற்றுமையால் / உமக்கு நேர்ந்த / பக்திக்குறைவை பரிகரிக்க / வகையின்றி வாடுவோருக்கு / வல்லமையுடன் உதவி புரியும் / அரிய வரத்தை / இறைவன் உமக்கு அளித்திருக்கிறார் என்பதை நினைவு கூர்ந்தருளும் / இப்பெரியவரத்திற்காக / நாங்களும் உம்முடன் சேர்ந்து இறைவனின் புகழைப்பாடத் துணை புரியும் / அவருக்கு நன்றி செலுத்தத் / தயை செய்யும். / நீர் எங்களுக்குச் செய்கின்ற/ இப்பேருதவிக்காக / எங்கள் வாழ் நாளெல்லாம் / நாங்கள் உமக்கு நன்றி உள்ளவர்களாய் இருப்போம். உமது வல்லமையுள்ள மன்றாட்டை / மக்களிடையில் அறியச் செய்வோம். பலர் அறியாப் புனிதரே / சிறப்பு இயல்புகள் பல படைத்தவரே / பலன் தரும் உமது பக்தி / பாரெங்கும் பரவ / எங்களால் ஆன பிரயாசையெல்லாம் எடுப்போம் என்றும் உறுதியாய் வாக்களிக்கிறோம்.

-ஆமென்.